**Tamilmanam International Research Journal of Tamil Studies**
*An international, peer-reviewed monthly academic research journal*
**ISSN: 3049-0723 (Online)**
**3107-7781 (Print)**

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Monthly Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor3.5 Multidisciplinary International
Issue DOI: https://doi.org/10.63300/tm12032026

**Vol. 12 No. 03 (2026): August 2026**, **p269-276**| Available online: www.tamilmanam.in

*Original Research Paper*

# திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்தில் கலிவிருத்தங்கள்

Kalivrithams in the Thiruvalavayudaiyar Thiruvilayadal Purana

**ச. சிவராம கிருஷ்ணன்,**

*முனைவர்பட்ட ஆய்வாளர், பதிவு எண் MKU23FFOL10833, தமிழ்த்துறை, தியாகராசர் கல்லூரி, மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டது, மதுரை, தமிழ்நாடு, இந்தியா.*

**S. Sivarama Krishnan,**

*Reg., No.: MKU23FFOL10833, Tamil Research Scholar, Thiagarajar College, Affiliated to Madurai Kamaraj University, Madurai, Tamil Nadu, India. Email: srksivatamil@gmail.com*

**முனைவர் அ.மோகனா,**

*உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, தியாகராசர் கல்லூரி,*

*மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டது, மதுரை, தமிழ்நாடு, இந்தியா*

**Dr. A. Mohana,**

*Assistant Professor of Tamil, Thiagarajar College, Affiliated to Madurai Kamaraj University, Madurai, Tamil Nadu, India.*

*Article history*
Received: 20-07-2026
Revised: 25-07-2026
Accepted: 30-07-2026
**Published: 01-08-2026**

*Corresponding Author
Email: *srksivatamil@gmail.com*

**Abstract:** The Thiruvalavayudaiyar Thiruvilayadal Puranam is the first Thiruvilayadal Puranam to appear in Tamil in the history of ancient literature. This book, which has various special names such as Vembattrar Thiruvilayadal, Aadi Thiruvilayadal Puranam, Pazhaya Thiruvilayadal, and Nambi Thiruvilaiyadal, contains 1,753 Vritta songs. This article is designed to analyze and explain the method of studying and the composition of the Kali Vrittams contained in this book, which was composed by Perumpatrapuliyur Nambi, based on the Vritta Paviyal. By dissecting the rhythmic nuances, metrical variations, and structural patterns within these verses, the study highlights how Nambi expertly adapted traditional prosodic norms to enhance the narrative's emotional and devotional depth. Furthermore, this research underscores the pivotal role of Kali Vrittams in bridging classical Tamil poetic forms with devotional literature, offering valuable insights for scholars of Tamil prosody (Yaappu) and medieval literary traditions.

**Keywords:** *Perumpatapuliyur Nambi, Vriddha Paviyal, Kalivriddha*.

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

**ஆய்வுச் சுருக்கம்**

புராண இலக்கிய வரலாற்றில் தமிழில் தோன்றிய முதல் திருவிளையாடற் புராணம் என்ற சிறப்புடன் திகழ்வது திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் ஆகும். வேம்பத்தூரார் திருவிளையாடல், ஆதி திருவிளையாடற் புராணம், பழைய திருவிளையாடல், நம்பி திருவிளையாடல் என்ற பல்வேறு சிறப்புப் பெயர்களை உடைய இந்நூல் 1753 விருத்தப் பாடல்களைக் கொண்டது. பெரும்பற்றப்புலியூர் நம்பியால் இயற்றப்பட்ட இந்நூலில் அமைந்துள்ள கலிவிருத்தங்களின் பயில்வு முறை மற்றும் யாப்பமைதியினை விருத்தப் பாவியலின் அடிப்படையில் ஆராய்ந்து எடுத்துரைக்கும் வகையில் இக்கட்டுரை அமையப்பெறுகிறது.

**திறவுச்சொற்கள்:** பெரும்பற்றப்புலியூர் நம்பி, விருத்தப்பாவியல், கலிவிருத்தங்கள்.

**முன்னுரை**

தமிழ் இலக்கிய உலகில் புராண இலக்கியங்களுக்கு தனிச்சிறப்புண்டு. அவ்வகையில் சைவ சமயத்தின் வளர்ச்சிக்கு வித்திட்ட புராணங்களுள் சிறப்பிடம் பெற்றது திருவிளையாடற் புராணம் ஆகும். இத்திருவிளையாடற் புராணங்களுள் காலத்தால் முந்தையதாகவும் கி.பி. 13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகவும் விளங்குவது திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம் ஆகும். பெரும்பற்றப்புலியூர் நம்பியால் இயற்றப்பட்ட இந்நூலில் அமைந்துள்ள பாக்களுள் கலிவிருத்தங்களின் பயில்வு நிலை மற்றும் யாப்பமைதி குறித்து இங்கு ஆராயப்படுகிறது.

**கலிவிருத்தங்களின் இலக்கணமும் சிறப்புகளும்**

விருத்த வடிவங்களில் ஆசிரிய விருத்தத்தை அடுத்துப் பெருமளவு கையாளப்படுகின்ற வடிவம் கலிவிருத்தம் ஆகும். கலிப்பாவின் இனமாக அளவடி நான்கு தம்முள் ஒத்து அமைகின்ற செய்யும் வடிவம் கலிவிருத்தம்.

***“நாலொரு சீரான் நடந்த அடித்தொகை***
***ஈரிரண் டாகி இயன்றவை யாவும்***
***காரிகை சான்ற கலிவிருத் தம்மே”*** ***(கா.பா.நூ.79)***

என்று காக்கைப்பாடினியம் கலிவிருத்தத்திற்கான இலக்கணத்தை வரையறுத்துள்ளது. ‘அளவு நான்கின கலிவிருத் தம்மே’ என்று கலமும் இதனை வழிமொழித்துள்ளது.

தமிழ் இலக்கண நூல்கள் பலவும் கலிவிருத்தத்தின் இலக்கணத்தை எடுத்து இயம்புகின்றன. காலந்தோறும் தமிழ் இலக்கியங்களில் புலவர் பெருமக்களால் கையாண்டு வரும் விருத்த வடிவமாக கலிவிருத்தம் திகழ்வதன் மூலம் இதன் சிறப்பினை அறியமுடிகிறது. குறிப்பாக பன்னிரு திருமுறைகளில் அப்பர் தேவாரத்தில் ஐந்தாம் திருமுறை முழுவதும் இக்கலிவிருத்த யாப்பினால் அமைந்திருப்பது தனிச்சிறப்பாகும்.

தமிழின் முதல் திருவிளையாடற் புராணம் என்ற சிறப்பினை உடைய திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்தில் சீர்வாய்ப்பாடு ஒத்தவை, எழுத்தெண்ணிக்கை ஒத்தவை ஆகிய

இருநிலைகளில் கலிவிருத்தமானது ஆட்சிபெற்றுள்ளது. இத்திருவிளையாடற் புராணத்தில் 157 கலிவிருத்தப் பாடல்கள் அமைந்துள்ளன.

**விருத்தப்பாவியல் கூறும் கலிவிருத்த வகைகள்**

விருத்தப் பாக்களின் இலக்கணத்தைக் கூறும் நூலாக பத்தொன்பதாம் நூற்றாண்டில் தி.வீரபத்திர முதலியாரால் இயற்றப்பட்டது விருத்தப் பாவியல் எனும் நூலாகும். விருத்தப் பாக்களுக்கு இலக்கணம் கூறும் விருத்தப்பாவியல் குறிப்பிடும் கலிவிருத்த வடிவங்கள் வருமாறு:

1. மா கூவிளம் கூவிளம் கூவிளம் (நேர்11, நிரை12)
2. விளம் விளம் மா கூவிளம்

விருத்தப்பாவியல் உரை வாயிலாகவும் சில கலிவிருத்த வடிவங்கள் அறிய வருகின்றன. அவை வருமாறு:

1. காய் காய் மா தேமா
2. மா புளிமா புளிமாங்கனி தேமா
3. மா மா மா காய்
4. மா மா மா மா

விருத்தப் பாவியல் காட்டும் மா கூவிளம் கூவிளம் கூவிளம் (நேர் 11, நிரை 12), விளம் விளம் மா கூவிளம் எனும் இரு கலிவிருத்த வடிவங்களை திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்தில் காணமுடிகிறது. இவற்றை வகை மாதிரிச் சான்றுகளுடன் விரிவாகக் காணலாம்.

**வகை 1: மா கூவிளம் கூவிளம் கூவிளம் (நேர் 11, நிரை 12)**

இலக்கண ஆய்வாளர்களால் போற்றப்பட்டிருக்கும் இக்கலிவிருத்த வடிவத்திற்கு விருத்தப்பாவியல் இலக்கணம் கூறியுள்ளது. அஃது வருமாறு:

***காத லிக்குங்க லிவிருத் தத்தொரு***
***பாத மாவருங் கூவிளம் பற்றிடி***
***னாத லானிறை நேர்க்கெழுத் தாறிரண்***
***டோதி னாரொடு பஃதுட னொன்றரோ (வி.பா.5:1)***

மாச்சீரோடு கூவிளச்சீர் புணரும்போது ஒருவித கலிவிருத்தம் உண்டாகும். இக்கலிவிருத்தம் நேரசையில் தொடங்குமானால் 11 எழுத்தக்களையும் நிரையசையில் தொடங்குமானால் 12 எழுத்துக்களையும் பெறும். இவ்வகைக் கலிவிருத்தத்தில் பெரும்பான்மை முதற்சீர் குறிலீற்று மாச்சீராகவும் ஏனைய மூன்று சீர்களும் கூவிளச் சீர்களாகவும் அமையும். எனவே இது 'மா கூவிளம் கூவிளம் கூவிளம்' என்னும் வாய்பாட்டு அமைப்பினையும் பெறுகின்றது. இவ்வகைக் கலிவிருத்தத்தில் சீர்வாய்பாட்டினைவிட எழுத்தெண்ணிக்கையே பெரிதும் கவனிக்கப்படுகின்றது.

இக்கலிவிருத்த இலக்கணத்தை வரையறுக்குமிடத்து சான்றுகளை விருத்தப்பாவியல் குறிப்பிட்டுள்ளது.

***இவ்விதிக்கு உதாரணம் அப்பர் திருக்குறுந்தொகை, கம்பன் 'உலகம் யாவையும் தாமுள வாக்கலும்' என்னும் செய்யுள் முதலியனவாம். (வி.பா.உரை, ப.21)***

இவ்வடிவத்தின் இலக்கணப் பயில்நிலை குறித்து ய.மணிகண்டன் கூறியுள்ள கருத்து இத்தொடர்பில் இணைத்தெண்ணத்தக்கது.

***நேரசையில் தொடங்கும் அடிகளாலான கலிவிருத்தம் அடிதோறும் பதினோர் எழுத்துக்களைப் பெறுவதாகவும், நிரையசையில் தொடங்கும் அடிகளாலான கலிவிருத்தம் அடிதோறும் பன்னிரண்டு எழுத்துக்களைப் பெறுவதாகவும் கலிவிருத்த வகைகள் அமைந்துள்ளமை முதலில் யாப்பருங்கல விருத்தியுரை சுருக்கமாகச் சுட்டியுள்ளது. (யா.வி.ப.520) இவ்வகை பற்றிக் காரிகை காரிகையுரை ஆகியன எதுவும் குறிப்பிடவில்லை. காரிகைக்குப் பிந்தைய வரலாற்றில் விருத்தப்பாவியல் கவிஞராக, கவி பாடலாம், எளிதாகப் பாடலாம், பாவலர் பண்ணை ஆகிய இக்கலிவிருத்த வகையிலக்கணத்தைக் கூறுகின்றன.***

திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்தில் காப்பு, அவையடக்கம், நூற்பயன் ஆகிய பகுதிகளிலும் 23 திருவிளையாடல்களிலும் 39 பயிலிடங்களில் மொத்தம் 93 பாடல்கள் 'மா கூவிளம் கூவிளம் கூவிளம் (நேர் 11, நிரை 12)' எனும் கலிவித்த வகையில் அமைந்துள்ளன. நேர் 11 எனும் கலிவிருத்த வகைக்குச் சான்றாக அமையும் ஞானோபதேசஞ் செய்த திருவிளையாடலில் உள்ள பாடல் வருமாறு:

***தேடு நீசிவ பாக்கியஞ் செய்தனை***
***நாட வேண்டுவ கண்டனை யானமைப்***
***பாட வேண்டுமெ னப்பரங் கண்டவ***
***ராடி வாசக மோதுவ ரன்புற. (ஞானோப.திரு.49)***

இப்பாடலில் அனைத்து அடிகளிலும் உள்ள முதற்சீர்கள் நேரசையில் தொடங்கி ஏனைய சீர்கள் கூவிளச்சீர்களாக அமையப்பெற்று அடிமுழுவதும் 11 எழுத்துக்களைப் பெற்று 'மா கூவிளம் கூவிளம் கூவிளம்' எனும் வாய்பாட்டுடன் பொருந்தி வந்துள்ளது.

நிரை 12 எனும் கலிவிருத்த வகைக்குச் சான்றாக அமையும் ஞானோபதேசஞ் செய்த திருவிளையாடலில் உள்ள பாடல் வருமாறு:

***மருவு பொற்பத மன்னுறக் கண்டுள***
***முருகி யற்புத வாசக மோதுவார்***
***பரவு சென்னியம் பத்தெடுத் தோதியே***
***யரிய பாடலச் சோவென வோதினார். (ஞானோப.திரு.50)***

இப்பாடலில் அனைத்து அடிகளிலும் உள்ள முதற்சீர்கள் நிரையசையில் தொடங்கி ஏனைய சீர்கள் கூவிளச்சீர்களாக அமையப்பெற்று அடிமுழுவதும் 12 எழுத்துக்களைக் கொண்ட கட்டளையில் அமைந்த அடிகளாகவும் 'மா கூவிளம் கூவிளம் கூவிளம்' என்ற வாய்பாட்டில் பொருந்தி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்தில் 93 பாடல்கள் இவ்வகைக் கலிவிருத்த யாப்பில் பயின்று வந்துள்ளன. எழுத்தெண்ணிக்கையில் அனைத்துப் பாடல்களும் ஒத்துள்ளன. ஆனால் சீர் வாய்பாட்டமைப்பினை பொறுத்தவரை ஒழுங்கமைவினைப் பெறவில்லை.

இத்திருவிளையாடற் புராணத்தில் 'மா கூவிளம் கூவிளம் கூவிளம் (நேர் 11, நிரை 12)' எனும் வாய்பாட்டிலமைந்த கலிவிருத்தப் பாடல்களின் எண்ணிக்கை பின்வருமாறு அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

| **வரிசை எண்** | **பகுதி மற்றும் படலங்கள்** | **பாடல்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| 1 | காப்பு | 1 |
| 2 | அவையடக்கம் | 2 |
| 3 | நூற்பயன் | 8 |
| 4 | மலயத்துவசனையழைத்த திருவிளையாடல் | 4 |
| 5 | நான்மாடக் கூடலான திருவிளையாடல் | 1 |
| 6 | சித்தரான திருவிளையாடல் | 7 |
| 7 | கல்லானை கரும்பு வாங்கின திருவிளையாடல் | 9 |
| 8 | ஆனையெய்த திருவிளைடல் | 4 |
| 9 | ஞானோபதேசஞ்செய்த திருவிளையாடல் | 13 |
| 10 | நரி குதிரையான திருவிளையாடல் | 2 |
| 11 | மகாபாதகந்தீர்த்த திருவிளையாடல் | 1 |
| 12 | வெப்புத்தீர்த்த திருவிளையாடல் | 5 |
| 13 | கழுவேறின திருவிளையாடல் | 4 |
| 14 | உலவாக்கிழி கொடுத்த திருவிளையாடல் | 1 |
| 15 | அட்டமாசித்தி பகிர்ந்த திருவிளையாடல் | 1 |
| 16 | தண்ணீர்பந்தர் வைத்த திருவிளையாடல் | 2 |
| 17 | இந்திரன் முடிமேல் வளையெறிந்த திருவிளையாடல் | 4 |
| 18 | பொன்னனையாளுக்கு அருள்புரிந்த திருவிளையாடல் | 2 |
| 19 | சோழனைக் கொண்டாழியிற்றாழ்த்த திருவிளையாடல் | 2 |

| | | |
|---|---|---|
| 20 | விடைக்குறியம்பெய்த திருவிளையாடல் | 1 |
| 21 | திருமுகங்கொடுத்த திருவிளையாடல் | 1 |
| 22 | பலகையிட்ட திருவிளையாடல் | 7 |
| 23 | பன்றிக்குட்டிகளுக்குத் தாயான திருவிளையாடல் | 1 |
| 24 | சான்றழைத்த திருவிளையாடல் | 6 |
| 25 | நாரைக்கு அருள்புரிந்த திருவிளையாடல் | 2 |
| 26 | வேதம் உணர்த்திய திருவிளையாடல் | 2 |

**வகை: 2 விளம் விளம் மா கூவிளம்**

விளம் விளம் மா கூவிளம் எனும் கலிவிருத்த வகைக்கு விருத்தப் பாவியல் கூறும் இலக்கணம் வருமாறு:

***முதலிரு சீர்விள மூன்று மாவினம்***
***பதமது கடையினிற் பசிய கூவிளம்***
***மதியது பொருகிலா மதிதொறுங் குறைஇ***
***புதியது செய்யினும் பொருவில் பூவையே (வி.பா.5:2)***

முதலில் பயின்று வரும் இரண்டு சீர்களும் விளச்சீர்களாகவும், மூன்றாம்சீர் மாச்சீராகவும் இறுதிச்சீர் கூவிளச்சீராகவும் அமைந்து வருகின்ற கலிவிருத்தங்கள் இவ்வகையின் பாற்படும். இதற்கு உதாரணம் அப்பர் நமச்சிவாயப்பதிகம் (சொற்றுனை வேதியன் சோதி வானவன்) மற்றும் மேருமந்திர புராணத்திலும் உதாரணம் காண்க (வி.பா.உரை.ப.22) என்கிறது.

திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்தில் காப்புப் பகுதியிலும், 18 திருவிளையாடல்களிலும் 24 பயிலிடங்களில் மொத்தம் 64 பாடல்கள் 'விளம் விளம் மா கூவிளம்' எனும் கலிவிருத்த வடிவத்தில் அமைந்துள்ளன. இக்கலிவிருத்த வகைக்குச் சான்றாக அமையும் அட்டமாசித்தி பகர்ந்த திருவிளையாடலிலுள்ள பாடல் வருமாறு:

***மைப்படு கண்டனே மதுரை வள்ளலே***
***துப்பமர் மெய்யனே சொக்க நாதனே***
***யொப்பொடு கேட்பமென் றுள்ளம் பற்றியே***
***மெய்ப்படு சித்தியை விளம்பென் றேத்தினர். (அட்டமா.திரு.13)***

இப்பாடலில் அடிதோறும் முதலிரு சீர்களும், நான்காம் சீரும் கூவிளச்சீர்களாகவும், மூன்றாம் சீர்கள் மாச்சீர்களாகப் பயின்று வந்து விளம் விளம் மா கூவிளம் என்ற வாய்பாட்டுடன் பொருந்தி வந்துள்ளது.

சாதாரி பாடின திருவிளையாடலில் 'விளம் விளம் மா கூவிளம்' எனும் வாய்பாட்டினாலான கலிவிருத்தப்பாடல் வருமாறு:

***உரவிது நெடிதுநின் றெரியு மொன்றுபோ***

***லரிதிது கொடுவரு மடவி தூரிது***

***தருமொரு விறகொரு காசு தையலீ***

***ரெரிவிழுங் கொண்மினென் றினைய கூறுவன்*** ***(சாதாரி, திரு.29)***

இப்பாடலில் அடிதோறும் உள்ள முதற்சீர்கள் கருவிளச்சீர்களாகவும், இரண்டாம் சீர்கள் கருவிளம் மற்றும் கூவிளச்சீர்களாகவும், மூன்றாம் சீர்கள் மாச்சீர்களாகவும் அமைந்து வர ஈற்றுச்சீர் முழுவதும் கூவிளச்சீர்களாக பயின்று வந்து விளம் விளம் மா கூவிளம் எனும் வாய்பாட்டுடன் பொருந்தி நிற்கிறது.

பெரும்பற்றப்புலியூர் நம்பியால் இயற்றப்பட்ட இத்திருவிளையாடற் புராணத்தில் அமைந்துள்ள விளம் விளம் மா கூவிளம் எனும் கலிவிருத்தப் பாடல்களின் எண்ணிக்கை அட்டவணையில் பின்வருமாறு கொடுக்கப்பட்டுள்ளது.

| **வரிசை எண்** | **பகுதி மற்றும் படலங்கள்** | **பாடல்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| 1 | காப்பு | 2 |
| 2 | கடலழைத்த திருவிளையாடல் | 10 |
| 3 | கிழியறுத்த திருவிளையாடல் | 1 |
| 4 | ஞானோபதேசஞ்செய்த திருவிளையாடல் | 1 |
| 5 | விருத்த குமாரபாலரான திருவிளையாடல் | 2 |
| 6 | மாறியாடின திருவிளையாடல் | 3 |
| 7 | பழியஞ்சின திருவிளையாடல் | 2 |
| 8 | உலவாக்கிழி கொடுத்த திருவிளையாடல் | 6 |
| 9 | அட்டமாசித்தி பகர்ந்த திருவிளையாடல் | 9 |
| 10 | தண்ணீர்பந்தர் வைத்த திருவிளையாடல் | 2 |
| 11 | சோழனைக் கொண்டொழியிற்றாழ்த்த திருவிளையாடல் | 4 |
| 12 | வரகுணனுக்குச் சிவலோகங்காட்டின திருவிளையாடல் | 4 |
| 13 | சாதாரி பாடின திருவிளையாடல் | 7 |
| 14 | திருமுகங்கொடுத்த திருவிளையாடல் | 2 |
| 15 | பலகையிட்ட திருவிளையாடல் | 2 |
| 16 | இசைவாது வென்ற திருவிளையாடல் | 1 |
| 17 | மாமேருவிற் கயல் செண்டு பொறித்த திருவிளையாடல் | 3 |
| 18 | நாரைக்கு அருள்புரிந்த திருவிளையாடல் | 2 |
| 19 | வேதம் உணர்த்திய திருவிளையாடல் | 1 |

**நிறைவுரை**

பாண்டிய நாட்டில் சிவபெருமான் நிகழ்த்திய அருள்விளையாடல்களைத் தொகுத்துக் கூறும் தமிழின் முதல் திருவிளையாடற் புராணம் என்ற சிறப்பினை உடையது திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம் ஆகும். இந்நூல் தமிழ்த்தாத்தா உ.வே.சா. அவர்களால் இருமுறை பதிப்பிக்கப்பட்ட தனிச்சிறப்புடையது. பெரும்பற்றப்புலியூர் நம்பியால் இயற்றப்பட்ட இந்நூலில் அமைந்துள்ள விருத்த வகைகளுள் கலிவிருத்தங்களின் பயில்வு மற்றும் யாப்பமைதி முதலியவற்றை விருத்தப் பாவியலின் நோக்கில் விளக்கும் வகையில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**துணைநூற் பட்டியல்**

[1]. முனைவர் அருணகிரி, மு. (உ.ஆ.), பெரும்பற்றப்புலியூர் நம்பியின் திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம், அருணா பப்ளிகேஷன்ஸ், சென்னை - 600 049.

[2]. சாமிநாதஜயர், உ.வே. (ப.ஆ.), திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம், கேசரி அச்சுக்கூடம், சென்னை – 600 001, இரண்டாம் பதிப்பு, 1927.

[3]. முனைவர் சுப்பிரமணியன், ச.வே. (ப.ஆ.), தமிழ் இலக்கண நூல்கள், மெய்யப்பன் பதிப்பகம், 53, புதுத்தெரு, சிதம்பரம் – 608 001.

[4]. மணிகண்டன், ய., தமிழில் யாப்பிலக்கணம் வரலாறும் வளர்ச்சியும், காலச்சுவடு பதிப்பகம், 2016.

[5]. மோகனா, அ., தேவார யாப்பியல், நெய்தல் பதிப்பகம், நெ.16, சின்னப்பா தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.

[6]. வீரபத்திர முதலியார், தி., விருத்தப்பாவியல் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி, முதற்பதிப்பு, 1984.